நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். **சிசி. 14 /2022**

வழக்கு சாட்சி- **அ.சா.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | மோகன்தாஸ் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராசு | : | தொழில் | சென்னை துறைமுக ஊழியர் (ஓய்வு) |
| கிராமம் | மணக்கரம்பை | : | சமயம் | |
| தாலுக்கா | திருவையாறு | : | வயது | 70 /2023 |

(எதிரிகள் ஆஜர் )

<u>**நாள் : 04.07.2023**</u>

**முதல் விசாரணை:**

**1)** நான் மணக்கரம்பையில் குடியிருந்து வருகிறேன். சென்னை துறைமுகத்தில் பணி புரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது அம்மாவிற்கு அரசாங்கமூலம் 2 செண்ட் நிலம் வழங்கப்பட்டது. அதில் எதிரி குமார் டாடா ஏசி வாகனத்தை நிப்பாட்டியும், மர சாமான்களை போட்டும் பயன்படுத்தி வந்தார். நான் பலமுறை அவரை இடத்தை காலி செய்ய சொல்லியும் அவர் காலி செய்யவில்லை. கடந்த 04.10.2021 ஆம் தேதியன்று சுமார் மாலை 05.30 மணி அளவில் நான் மறுபடியும் அவரை இடத்தை காலி செய்ய சொன்னபோது அவர் என்னை தகாத வார்த்தையினால் திட்டினார். அதன்பிறகு மறுபடியும் இவ்வாறு காலி செய்ய கூறினால் உன்னை கொலை செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விட்டார். எதிரி குமார் அருகில் இருந்த கட்டையை எடுத்து என்னை தலையில் அடித்தார். மற்ற 2 எதிரிகள் என்னை கையால் அடித்தார்கள். நான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். என் மனைவி என்னை TMCH மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தார்.

2) என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுததான். அது நான் அளித்ததுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1/அ.சா.**1 ஆகும், போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**(**ஒம்./-**திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு **)**